


தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 31.03.2012

முதற்பக்கம்
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்பூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்க்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
சமத்துவம்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

# புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (42)

## 42. பிள்ளையாரைக் கண்டு மிரண்ட புலிகள்!



புலிகளின் வதை முகாமுக்குள் ஒருவர் அடைக்கப்பட்டுவிட்டால், அதன்பின்னர் உலகில் என்ன நடக்கிறது என்பதே அவருக்குத் தெரியாமல் போய்விடும். பத்திரிகைகள் படிக்கவோ (அவர்கள் வெளியிடும் 'ஈழநாதம்' உட்பட), வானொலி கேட்கவோ முடியாது. வெளியுலகில் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்கான ஒரே வழி, புதிதாக வரும் கைதிகளை விசாரித்து அறிந்து கொள்வதுதான். அதுவும் வருபவர் உண்மையான பொதுமகனா அல்லது புலிகளால் திட்டமிட்டு உள்ளேயிருக்கும் கைதிகளின் மனநிலையை அறிவதற்காக கைதி என்ற போர்வையில் அனுப்பப்பட்டவரா என்பதை நன்கு அறிந்த பிறகுதான் அவர்களுடன் உரையாட முடியும். 'கிடந்து நுழைபவனுக்கு கீழாலை நுழைபவன்' என்று சிலேடையாகக் குறிப்பிடுவது போல, புதியவர்களிடம் விடயங்களை லாவகமாகக் கறக்கும் 'கில்லாடிகள்' சிலரும் அங்கு இருக்கத்தான் செய்தார்கள்.

ஒருவர் இந்த வதை முகாமுக்குள் வந்துவிட்டால், அவருடைய சகல வழமைகளும் படிப்படியாக இல்லாமல் போய்விடும். வழமையாக வீட்டில் சாப்பிடும் சாப்பாடு கிடையாது. வீட்டில் படுப்பது போல பாய் - தலையணை போட்டுப் படுக்க முடியாது. மனைவி – பிள்ளைகள், உற்றார் உறவினர்களைப் பார்க்க முடியாது. அவ்வளவு ஏன் சுத்தமான வெளிக்காற்றை சுவாசிக்கக்கூட முடியாது. வெளிக்காட்சிகள் எவற்றையும் பார்க்க முடியாது. தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் உருவ வழிபாடு செய்ய முடியாது. வேண்டுமானால் அரூப வழிபாடு செய்ய முடியும். அதில் ஒன்றில் மட்டுமே – அதாவது மனிதர்களின் மனதில் மட்டுமே புலிகளால் உள் நுழைந்து பார்க்க முடியாது.

ஆனால் அதுகூடச் சந்தேகம்தான். ஏனெனில் காற்றுக்கூட புகமுடியாத இடங்களில் கூட, புலிகள் நுழைவார்கள் என புலி ஆதரவாளர்கள் தற்பெருமை பேசுவதுண்டு. அதில் ஓரளவு உண்மையிருந்த ஒரு காலம் இருந்தது. ஜெர்மானிய பாசிச சர்வாதிகாரி ஹிட்லர் கூட, தனக்கு எதிரான மனோபாவம் கொண்டிருந்தார்கள் எனச் சொல்லிப் பலரை தீர்த்துக் கட்டிய வரலாறுகள் நிறைய உண்டு.

பாசிச புலிகளின் வளர்ப்பு அப்பனான ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூட, மக்களின் மனங்களில் நுழைந்து பார்ப்பதற்கு முற்பட்ட சம்பவம் உண்டு. ஜே.ஆர். ஜெயவர்த்தன 1977ல் ஆட்சிக்கு வந்த பின்னர், இலங்கையைச் சிங்கப்பூராக மாற்றிக் காட்டுவேன் என வாய்ச்சவடால் அடித்தார். அதேநேரத்தில் இலங்கையில் இருந்த ஓரளவு அமைதியையும் இல்லாமல் செய்து, இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றினார். தமிழ் மக்கள் அனைவரையுமே பயங்கரவாதிகளாகச் சித்தரித்து, அவர்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டார்.

அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியாக நிர்வகிக்கும் பொருட்டு தனது மருமகனான (சகோதரியின் மகன்) பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கவை யாழ்ப்பாணத்துக்கான இணைப்பதிகாரியாக நியமித்தார். அந்த நேரத்தில் வீரதுங்கவுக்கு பகிரங்கமாக ஜே.ஆர். ஜெயவர்த்தன விடுத்த ஆணையில், இலங்கையிலிருந்து, குறிப்பாக வட பகுதியிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் கட்டும்படி உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவில் பிரத்தியேகமான ஒரு வசனமும் இருந்தது. அதாவது பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மட்டுமின்றி, அதற்கு 'உளம் கொண்டிருந்தாலும்' அவர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டும்படி குறிப்பிட்டிருந்தார். அதாவது பௌதீக ரீதியாக மட்டுமின்றி, லௌகீக ரீதியாகவம் மனிதர்களை ஆராய்ந்து – மனித மனங்களில் புகுந்து பார்த்து – விரோதமானவர்களை அழிக்கும்படி உத்தரவிட்டாh!

புலிகளும் அவ்வாறானதொரு செயற்பாட்டையே தமக்கு எதிரானவர்கள் சம்பந்தமாகக் கையாண்டார்கள். ஹிட்லர், ஜே.ஆர். ஜெயவர்த்தன, புலிகள் என இவர்கள் எல்லோருமே தமது பாசிசச் செயற்பாடுகள் சம்பந்தமாக ஒரு நேர்கோட்டில் வருவதையே இது காட்டுகிறது.

உள்ளே உள்ள கைதிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் தெய்வங்களை மட்டுமே தமது விடுதலைக்கு உதவியாக அழைத்த வண்ணம் இருந்தனர். பலருக்கு உருவம் இல்லாமல் இறை வழிபாடு செய்து பழக்கமின்மையால், ஏதாவது ஒரு கடவுள் படம் தேவையாக இருந்தது. எமது சைவ சமயத்தில் ஏராளமான கடவுள்கள் (வர்ண வர்ண நிறங்களில்) ஓவியர் ரவிவர்மாவிலிருந்து இன்றைய நவீன ஓவியர்களின கோட்டோவியங்கள் வரை இருந்தும், சிறைக்குள்ளே ஒரு படம் கூட இல்லாமல் இருந்ததால், எமது கைதிகள் மன வேதனையில் இருந்தார்கள்.

இருப்பினும் அவர்கள் காலையில் முகம் கழுவுதல் என்ற ஒரு சம்பிரதாயச் சடங்கை முடித்த பின்னர், எமது ஹோலின் இணைப்பாக பக்கவாட்டில் இருந்த சிறிய அறையினுள் நுழைந்து சுவருக்கு பூசியிருந்த வெள்ளைச் சுண்ணாம்பைத் தேய்த்து திருநீறாகத் தமது நெற்றியில் பூசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். சுண்ணாம்பைப் பூசுவது உடலுக்குத் தீங்கானது என நான் ஒருமுறை சொன்ன போது, செம்புலிங்கம் என்ற ஒரு கைதி, எமது நாயன்மார்களில் ஒருவரை சுண்ணாம்பு அறைக்குள் பூட்டிக் கொடுமைப்படுத்தியதைச் சொல்லி என் வாயை அடைத்துவிட்டார்.

இந்த வழிபாட்டின் போது இன்னொரு விடயமும் அவர்களை மானசீகமாக ஒருமுகப்படுத்தியது. அந்த உள் அறையின் மிகவும் உயரமான சுவரில் மட்டும் ஒரு யன்னல் இருந்தது. அந்த யன்னலுக்கூடாக வெளியே நிற்கும் மாமரத்தின் பச்சைப் பசேல் என்ற கிளை ஒன்று தெரியும். அந்தக் கிளை மீது சிவப்பு நிறக் கடதாசிப்பூ கொடியொன்று பின்னிப்பிணைந்து 'அழகாக'க் காட்சி அளிக்கும். வெளியே என்றால் எமது பார்வையில் இந்தக் கடதாசிப்பூவுக்கு எந்த விதமான அர்த்தமும் கிடையாது. ஆனால் நாங்கள் சிறைப்பறவைகள் ஆன பின்னா ஒவ்வொரு விடயத்திற்கும் நிறைய அர்த்தங்கள் உண்டு எனத் தோன்றியது.



பகல் நேரங்களில் இந்த யன்னலினூடாக நாம் புனித காரியங்களுக்குப் பயன்படுத்தும் பசுமை நிறைந்த மாமர இலைகளையும், அதில் சுற்றிப் படர்ந்திpருந்த எனக்கு மிகவும் பிடித்தமான சிவப்பு நிற கடதாசிப் பூக்களையும் என்னை மறந்து ரசிப்பதுண்டு. இயக்கச்சியில் எமது காணிகளில் மாந்தோட்டம் என்று சொல்லுமளவுக்கு மாமரங்கள் இருந்தும், அங்கு காணாத ஒரு பரவசம் இந்த மாமர இலைகளைப் பார்க்கும் போது எனக்கு ஏற்படுவதுண்டு. புலிகளால் எமது மனங்கள் வெறுமையாக்கப்பட்ட பின்னர், நாம் காணும் ஒவ்வொன்றும் அழகாகவும், பெறுமதிமிக்கனவாகவும் தோன்றுகின்றன போலும். இரவு நேரங்களில் அந்த யன்னலினூடாகத் தெரியும் விண் மீன்களை நீண்ட நேரம் பார்த்த வண்ணம் இருப்பேன். அந்த நேரத்தில் நாம் வாழும் இந்தப் பிரபஞ்சம் பற்றிய என்னென்னவோ சிந்தனைகள் பல்கிப் பெருகும்.

இப்படியிருக்கையில் பக்தர்களுக்கு ஒரு 'வரப்பிரசாதம்' கிடைத்தது. சிறைக்கு புதிதாக 'அழைத்து' வரப்பட்ட ஒருவர் புதிய சாரம் ஒன்றை அணிந்து வந்திருந்தார். (எந்தப் பட்டுப் பிதாம்பரத்துடன் வந்தாலும், அதை உரிந்தெடுத்துவிட்டு புலிகள் கைதிகளுக்கென விசேடமாக வைத்திருக்கும் சிவப்புப் பூப்போட்ட சீத்தைத்துணி சாரத்தைத்தான் உடுத்தக் கொடுப்பாhகள் என்பது அந்த புதிய விருந்தாளிக்கு தெரிந்திருக்க நியாயமில்லை) அவரது புதிய சாரத்தில் ஒட்டியிருந்த சாரத்தைத் தயாரித்த கம்பனி விபரத்தாளில், பல வர்ணத்திலான பிள்ளையார் படம் ஒன்று ஒட்டப்பட்டு இருந்தது. அதை மிகவும் பக்குவமாக உரித்தெடுத்த எமது சிறை 'அன்பர்கள்'இ அந்தப் படத்தை உள் அறைச்சுவரில் ஒட்டி பக்திபூர்வமாகத் தமது வழிபாட்டை ஆரம்பித்தனர். நாளுக்கு நாள் பக்தர்கள் தொகை கூடிக் கொண்டிருந்தது.

சிறைக்குள் நடக்கும் விடயங்களை உள்ளே இருப்பவர்கள் யாராவது சொன்னால் தவிர, வெளியே உள்ள புலிகளுக்கு அறிந்து கொள்ளும்


Yarl TV
புலிகளின் வதை
முகாம்களில் ஒ
ஆண்டுகள் துன்
தோழர் மணிய
அனுபவத்தொட
சிங்களவர்கள்
நாங்கள்
யாழ்ப்பாணத்தி
அவலம்!
பரீசில் பரிதிமீது
மேற்கொள்ளப்பட்
புலிகளின் உள்ளக
போராட்டம் (பகுதி
பரீசில் பரிதிமீது
மேற்கொள்ளப்பட்
புலிகளின் உள்ளக
போராட்டம் (பகுதி
ராஜீவ்
கொலையாளிக
குற்றப் பின்னன
தமிழ் மக்கள் இ
வரும் சந்தர்ப்பா
றொபேட் பிளே
தயவுசெய்து ஸ்ரீ
மக்களுக்குப் பத
சொல்லுங்கள்
றொபேட் பிளே
தயவுசெய்து ஸ்ரீ
மக்களுக்குப் பத
சொல்லுங்கள்

www.padippakam.com

வாய்ப்பு இல்லை. அவர்கள் எப்போதாவது ஒருமுறை திடீரென உள்ளே நுழைந்து சோதனை செய்வதோடு சரி. அதுவும் பலத்த பந்தோபஸ்தோடுதான் உள்ளே வருவார்கள். அவர்கள் அடிக்கடி உள்ளே வராமைக்கு ஒரு காரணம், சிறைக்குள் இருப்பவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு தம்மீது கடுங்கோபத்தில் இருப்பார்கள் என்று ஏற்பட்ட பயம்தான். சில வேளைகளில் அந்த சருகு புலிகள் மீது, சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மையான வேங்கைகள் பாய்ந்து குதறிவிடுவார்கள் என அவர்கள் பயந்ததில் நியாயமுண்டு.

ஆனால் பக்தர்களின் பிள்ளையார் வழிபாடு தொடர முடியாமல் போய்விட்டது. காரணம், யாரோ ஒருவர் வெளியே போகும்போது இந்த வழிபாடு சம்பந்தமாக புலிகளுக்கு 'தகடு' கொடுத்துவிட்டார். (புலிகளின் விருந்தினராக நான் சென்ற பின்னர் பல புதிய 'கலைச் சொற்களை' அவர்களிடமிருந்து அறிந்து கொண்டேன். அதில் ஒன்றுதான் இந்தத் 'தகடு' என்ற சொல். இதன் அர்த்தம் மற்றவர்கள் பற்றி புலிகளுக்கு ;கோள்' சொல்வது. அவர்களது செயல்பாடுகளின் தரத்தைப் பொறுத்து அவர்களுக்கு ஒரு 'கேஜ்' இலிருந்து  ஐந்து கேஜ் வரை பட்டங்களும் சூட்டுவார்கள்) அவ்வளவுதான் திடுதிடுமென துப்பாக்கிகள் சகிதம் சிறைக்குள் புகுந்த புலிகள், சுவரில் ஒட்டப்பட்டிருந்த பிள்ளையார் படத்தைக் கிழித்து சுக்கு நூறாகக் கிழித்து எறிந்ததுடன், அதை ஒட்டியவர்களை நையவும் புடைத்தனர்.

இது நடந்த பின்னர் எம்முடன் கைதியாகவிருந்த ஒரு முன்னாள் புலி உறுப்பினரிடம் இதுபற்றிக் கேட்டேன்.
"தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போல புலிகளுக்கும் கடவுள் நம்பிக்கை இல்லையா?" என்பதுதான் எனது கேள்வியின் சாரம்.
அதற்கு அவர் சொன்ன பதில் எனக்கு வியப்பை அளித்தது.

அவரின் பதிலின்படி, புலிகளுக்கும் பகுத்தறிவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. 'தந்தை' பெரியாரைப் பற்றி அவர்களிடம் கேட்டால், 'தந்தை' செல்வநாயகத்தின் தமையனா தம்பியா எனக் கேட்கக்கூடியவர்கள் புலிகள்! 'தலைவர்' பிரபாகரனே நாள் கோள் பார்த்துத்தான் தாக்குதல்களுக்குத் திட்டமிடுபவர். அப்படியிருக்க பகுத்தறிவு பற்றி அவர்களிடம் கேட்டால், அது அப்துல் காதரிடம் அமாவாசை பற்றிக் கேட்ட கதையாகத்தான் இருக்கும்!



உண்மையென்னவென்றால், எமது கைதிகளின் இறைவழிபாடு, கடவுளிடமிருந்து தமக்கு சாபம் பெற்றுத் தருவதற்கான ஒரு நடவடிக்கை என்பதே புலிகளது அச்சத்துக்குக் காரணம். இது துப்பாக்கிச் சனியனை ஏந்திய எல்லோருக்கும் ஏற்படும் அச்சம் போலும். ஏனெனில் இலங்கை இராணுவ வீரர்கள் தமிழர்களுடைய இந்து வழிபாட்டுத் தலங்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்குவதாக தமிழ்த் தேசியவாதிகள் அடிக்கடி பிரச்சாரம் செய்வதை நான் கேட்டிருக்கிறேன். நான் அறிந்த வரையில் மோதல்களின் போது சேதமடைந்ததைத் தவிர, இராணுவம் திட்டமிட்ட ரீதியில் இந்துக் கோவில்களை இடித்தழித்தாக கேள்விப்பட்டது இல்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆரியகுளம் சந்தியிலிருந்த பிரசித்தி பெற்ற நாகவிகாரையை புலிகள் இடித்து அழித்ததை நான் நேரில் பார்த்திருக்கிறேன். (அதைப் படம் பிடிப்பதற்காக என்னிடம் சொல்லிவிட்டுச் சென்ற பல்கலைக்கழக மாணவரும், புளொட் இயக்கத்தின் தீவிர செயற்பாட்டாளருமான வவுனியாவைச் சேர்ந்த கேதீஸ்வரன் (கேதீஸ்), நாக விகாரையை இடித்தவர்கள் மீது இராணுவத்தினர் ஹெலிகொப்ரரில் இருந்து ஏவிய ரொக்கற் தாக்குதலில் அநியாயமாகப் பலியானார்)

அதற்கு முன்னதாக 1977 பொதுத்தேர்தலின் போது, யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் நடந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரச்சாரக் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசிய அனல் பறந்த சிங்கள விரோத இனவாதப் பேச்சின் விளைவாக, அன்றிரவு இராசாவின் தோட்டம் - ஸ்ரான்லி வீதிச் சந்தியிலிருந்த சிறிய விகாரையொன்றை உணர்ச்சிவசப்பட்ட தமிழ் இளைஞர்கள் தீக்கிரையாக்கியதையும், அந்த நேரத்தில் அதற்கருகில் வசித்து வந்த நான் அறிவேன். அதே இரவு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு முன்னால் இருந்த விகாரையும் தீக்கிரையாக்கப்பட்டது.

உண்மையென்னவெனில், புலிகளைப் போலவே துப்பாக்கிச் சனியனைத் தூக்கிய இலங்கை இராணுவமும் தமது செயல்களுக்காக கடவுளிடம் ஒரு நாள் விளக்கம் சொல்லவும் தண்டனை அனுபவிக்கவும் வேண்டும் எனப் பயந்து கொண்டுதான் இருந்தது. அதனால் அவர்கள் மத வேறுபாடு பார்க்காமல் தாம் நிலை கொண்டிருக்கும் இடங்களில் இந்துக்கடவுள் இருந்தால், அங்கு சென்று பக்திபூர்வமாக வழிபட்டு வந்ததைப் பல பொதுமக்களே என்னிடம் கூறியிருக்கிறார்கள். புலிகள் செய்ததைப் போல இந்துக் கோவில்களில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகவோ அல்லது தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசப் போராட்டத்தைத் தடுக்க புதிய கடவுளாக அவதாரம் எடுத்து, பொல்லுடன் மாவிட்டபுரக் கந்தசாமி கோவிலின் முன்னால் நின்று கொண்டு, கோவிலுக்குள்ளே திரிக்கை மீன் வாலும், சுறா மீனின் வேளா முள்ளும் வைத்திருந்த 'பெரியார்' சுந்தரலிங்கம் போலவோ இலங்கை இராணுவம் செயற்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டதில்லை.

ஆனால் புலிகள் என்னதான் அடக்குமுறைகளை மேற்கொண்ட போதும், பக்தர்கள் தமது மானசீக வழிபாட்டைத் தொடர்ந்த வண்ணம்தான் இருந்தனர். அவர்களது பிரார்த்தனையில் புலிகளுக்கு எதிராக ஏதாவது வேண்டிக் கொண்டார்களா அல்லது தமது விடுதலை, மனைவி மக்களது நல்வாழ்வு பற்றி வேண்டிக் கொண்டார்களா என்பதை நானறியேன். என்னதான் புலிகள் பிரார்த்தனை செய்தாலும், புலிக் கடவுள்கள், அவர்களது தலைவனான 'சூரியதேவனின்' வழிகாட்டலில் பெரும்பாலான கைதிகளுக்கு மரண தண்டனையும், சொற்பமானவர்களுக்கு கட்டாய உடலுழைப்பின் பின்னர் 'விடுதலை'யும் வழங்கிக் கொணடிருந்தனர்.

தொடரும்

முன்னைய பதிவுகள்